064512

01.09.2024 முதல் 30.11.2024 வரை 3 மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்.

வாய்மையே வெல்லும்

பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

24/09/24
இ3

**கடித (efile) எண்.9042/பக5(1)/2023-1, நாள்: 19.09.2024**

24 SEP 2024

அனுப்புநர்
திருமதி.சோ, மதுமதி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி –அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் 2009-2010-ஆம் கல்வியாண்டில் 200 ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, நலத்துறை பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், இவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 200 பள்ளிகளுக்கும், ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு 6 பட்டதாரி ஆசிரியர் பணியிடம் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் வீதம் 1200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 200 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும் என மொத்தம் 1400 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது-. இப்பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் 31.08.2024 வரை மூன்று மாதத்திற்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டது – 01.09.2024 முதல் 30.11.2024 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.64. பள்ளிக்கல்வி (இ1)துறை நாள். 15.03.2010.
2. அரசாணை (1டி) எண். 146, பள்ளிக் கல்வித்(பக5(1)) துறை, நாள். 02.09.2021.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க. எண். 021971 /எல்/இ3/2021, நாள். 29.05.2024.
4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.021971/எல் / இ3/2021, நாள். 11.09.2024.

------

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் 2009-2010-ஆம் கல்வியாண்டில் 200 ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, நலத்துறை நடுநிலைப் பள்ளிகளை 6 முதல் 10 வகுப்புகள் கொண்ட

Padasalai.Net

உயர்நிலை பள்ளிகளாக தரம் உயர்த்தியும், இவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 200 பள்ளிகளுக்கும், ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு 6 பட்டதாரி ஆசிரியர் பணியிடம் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் வீதம் 1200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 200 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும் என மொத்தம் 1400 ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிகமாக தோற்றுவித்து ஆணை வழங்கப்பட்டது. பார்வை 2-இல் காணும் அரசாணையில் இப்பணியிடங்களுக்கு 01.06.2021 முதல் 31.05.2024 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது. பார்வை 3-இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி இப்பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் 31.08.2024 வரை மூன்று மாதங்களுக்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டு முடிவுற்ற நிலையில், 01.09.2024 முதல் 28.02.2025 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் பார்வை 4-இல் காணும் கடிதத்தில் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேற்குறிப்பிட்டுள்ள 1400 ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.09.2024 முதல் 30.11.2024 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.09.2024 முதல் 30.11.2024 வரை மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334 நிதித்(சம்பளம்)துறை, நாள். 22.10.2022-இல் துறைச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

19/9/24

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக.

**நகல்**
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
நிதித்(கல்வி-II)துறை , சென்னை-9.
சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:- இவ்வலுவலக ந.க.எண்: 021971/அ2/இ3/2021 நாள்: 24.09.2024

தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர்

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

24/09/24

Padasalai.Net